காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

திருச்சியை அடுத்த அல்லித்துறையில், அறிஞர் அண்ணா சிலையை தமிழக முதலமைச்சர் கருணாநிதி திறந்து வைத்தபோது எடுத்த படம்

விலை 20 காசு

21-12-69

கேட்டீரா சேதி!

அது அல்ல வழி?

தமிழ் நாடு முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் கருணாநிதி அவர்கள் ஈழத்துக் கலாசாரச் செலவு செல்ல இருப்பதை எதிர்த்து டிசம்பர் திங்கள் தொடக்கத்தில், 'சிலோன் டெய்லி நியூஸ்' என்ற ஆங்கில ஏடு செய்தி வெளியிட்டிருந்தது! கலைஞரின் வருகையால் சிங்களர்—தமிழர் உறவு கெடும் என்ற வகையிலும், தமிழர்களைத் தூண்டிவிட்டு சிங்களருக்கு எதிராகச் செயல்படச் செய்துவிடுவார் என்றும் அண்டப் புளுகினை அவிழ்த்துவிட்டிருந்தது அந்த ஏடு. தொடக்க காலம் முதலே, திருமதி பண்டாவுக்கு தி. மு. க. என்றால் தீக்கனவாகவே இருந்து வந்திருக்கிறது திருமதியைத்தான் திருத்த முடியாது என்று தாய்த் தமிழகம் நினைத்தது. ஆனால் நாட்டுமக்களுக்கு உண்மை நிலைகளை எடுத்துக் காட்டவேண்டிய பெரும் பொறுப்பில் ஏடு நடத்துவோர்கூட, உண்மையின் பக்கம், தெளிவின் திசையில் திரும்பமாட்டார்கள் என்றும் நினைக்கவேண்டி நேர்ந்தது. அல்லாமல் பண்டாவின் கூட்டத்தைச் சேர்ந்த ஆர். ஜி. சேனநாயகா என்பவர், அண்மையில் கலைஞரை, பிரஞ்சு நாட்டு அதிபராயிருந்த டிகாலுடன் ஒப்பிட்டு, கனடாவில் அவர் நிகழ்த்திய ஒரு உரையின் விளைவுகளையும் சுட்டிக்காட்டி, அந்த விளைவுகளுடன் கலைஞரின் வருகையையும் இணைத்த அறிக்கை வெளியிட்டிருக்கிறார் தாய்த் தமிழகத்துக்கும், ஈழ தி. மு. க. வுக்கும் உள்ள உறவு நிலை குறித்து பேரறிஞர் அண்ணா காலத்திலிருந்தே புலப்படுத்தி வந்திருந்தும், ஈழ வெறியர்கள், மேலும் மேலும் இதுபோன்ற இழிவுப் பிரசாரங்களில் ஈடுபட்டு வருவது, உண்மையிலே இலங்கை விரும்பும் சமாதானத்துக்கு வழி வகுப்பதாக இருக்க முடியாது என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

அந்த முறைகூடாது!

நிலவுடைமையாளர்கள் முழுவதுமாக ஒடுக்கப்பட்டு, பெரும்பான்மையினரின் ஜனநாயக முறைக்கு உகந்த முறையில் சிறுபான்மையினர் சமப்படுத்தப்படவேண்டும் என்ற கொள்கை கம்யூனிஸ்டுகளுக்கு, இடது சாரியானாலும், வலது சாரியானாலும் உகந்ததேயாகும். துரதிருஷ்டவசமாக ஏன்பதைவிட, துடிப்புத் துடிப்புக் காரணமாகப் பிளவுண்டு போன கம்யூனிஸ்டுகளில், இடதுசாரிகள் எனப்படுவோர் தீவிரத்திட்டங்களை துரித நடைமுறைக்குக் கொண்டு வருவதிலே காட்டுகிற ஆர்வமும், செயல்படுகிற முறைகளும் முற்போக்கு எண்ணங்கொண்ட பொது மக்களை மட்டுமல்ல ஒத்தகொள்கையினைக் கொண்டிருக்கும் வலது சாரிகளினாலேகூட ஏற்றுக்கொள்ள முடிவதாயில்லை என்பதற்கு கேரளம் ஒரு முன்னுதாரணம்படைக்கவிருக்கிறது கேரள அரசு அண்மையில் நிறைவேற்றிய நிலச் சீர்திருத்தச் சட்டம் குடியரசுத் தலைவரின் அனுமதிக்கு அனுப்பப்பட்டு, (இன்று) ஏற்கவும் பட்டுவிட்டது. இதற்கிடையே, வருகிற ஜனவரி 1—ம் நாளுக்குள், சட்டம் கையெழுத்தானாலும் ஆகாவிட்டாலும் கேரள இடது கம்யூனிஸ்டுகள் நிலவுடைமையாளர்களின் நிலங்களை, சட்டம் குறிப்பிடும் அளவுக்கு மேலுள்ளவற்றை வன் முறையில் கைப்பற்றிக்கொள்ள தன் ஊழியர்களுக்கு மாநாடு ஒன்றின் அறிவிப்பு மூலம் உத்திரவிட்டிருக்கிறார்கள். ஆட்சி அதிகாரத்திலுள்ள வலது கம்யூனிஸ்டு முதல்வர், சட்டம் அனுமதியான பிறகு, அரசே உரிய உபரி நிலங்களை வழங்க நடவடிக்கை எடுக்கும் என்றும், இதனை மீறி வன்முறைச் செயல்களில் ஈடுபடுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்திருக்கிறார். கிளர்ச்சிகள் மூலமே தங்கள் இலட்சிய இலக்கை எட்ட முடிவெடுத்து, அந்தத் தினவிலேயே திளைத்திருக்கும் இடதுசாரிகள், இந்த அறிவிப்பெ லட்சியம் செய்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. இடது சாரிகள் முந்திக்கொண்டால்தானே, உபரிகள் தங்கள் கட்சியினருக்கு மட்டுமே என்று ஆக்கிக்கொள்ள முடியும்? அரசாங்கம் ஒன்று தேவையே இராது என்ற நிலையிலுள்ள இயக்கம், அரசாங்க ஆணைக்கு அடங்கிவிடுமானால் அப்புறம் அதன் சித்தாந்தம் என்ன ஆவது? எப்படியோ, இடதுக்கும் வலதுக்கும் பூசல் முற்றிக்கொண்டிருக்கிறது. இடையிலே பொது மக்கள் இருக்கிறார்கள் என்பது நினைவு கூரப்பட்டால் நல்லது!

புற்றுநோய்-ஒரு எச்சரிக்கை!

கண்ணைக் கவரும் வண்ணங்களில் உணவுப் பொருள்களைப் பார்க்கின்றபோது நாக்கில் நீர் கொட்டுகிறது அல்லவா? அந்த வண்ணங்களால் புற்றுநோய் உள்படப் பல பயங்கரமான வியாதிகள் வரக்கூடுமாம். சுகாதார அதிகாரிகள் பரிசோதனை செய்யும் [உணவுப் பண்டங்களில் மூன்றில் ஒரு பங்கு கலப்படமானவை. கலப்படமான அல்லது தரக்குறைவான உணவுப் பண்டங்களை கவர்ச்சிகரமாக ஆக்குவதற்காக பலவித நிறங்கள் உபயோகிக்கப் படுகின்றன. இந்த வண்ணங்களால் தீராத வியாதிகள் வந்து சேரும் என்று நம்பப்படுகிறது. மிட்டாய்க் கடையில் உள்ள மஞ்சள் நிற ஜிலேபிக்கு நிலக்கரியிலிருந்து தயாராகும் ஒருவகை சாயம் உபயோகப்படுத்தப் படுகிறது. அந்தச் சாயத்தால் புற்றுநோய் உண்டாகலாம்! டில்லியில் எல்லா ஜிலேபி கடைகளும் இந்தச் சாயத்தை உபயோகிக்கின்றன. உருளைக்கிழங்கு மசாலாவில் பளபளக்கும் பச்சை நிறப் பட்டாணி நம்மைக் கவருகிறது. அல்லவா? அந்த நிறத்திற்காகப் பயன்படுத்தப்படும் கலவையிலிருந்தும் புற்று நோய் வரக்கூடும். வெளிர் சிவப்பு நிறத்தில் உள்ள பப்படத்தின் மூலமும் புற்று நோய் உண்டாகலாம். பருப்பு வகைகளுக்கும் இத்தகைய அபாயகரமான நிறங்கள் சேர்க்கப்படுகின்றன மஞ்சள் தூளைப் பளபளப் பாக்குவதற்காக ஒருவகை நிறம் சேர்க்கப்படுகிறது. அதனால் ரத்த சோகை, பக்கவாதம் முதலிய நோய்கள் உண்டாகின்றன. இளம் பெண்களுக்கு மலட்டுத்தனமும் அதனால் ஏற்படும். எனவே, எச்சரிக்கை!

★

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாத சந்தா ரூ. 5

மலர் 6 | 21—12—69 | இதழ் 23

முகையூர்-ஒரு வைரமணி!

எதிர்பார்த்ததைவிட மிகப் பெரும்பான்மை வாக்குகள் வேறுபாட்டில், முகையூர் இடைத் தேர்தலில் கழக வேட்பாளர் திருமதி பத்மாவதிகோவிந்தசாமி அவர்கள் பெற்றிருக்கும் வெற்றியானது கழகம் சூடிக்கொண்டிருக்கும் முத்தாரத்தில் இன்னுமோர் வைரமணியைப் பொறித்துக்கொண்டது போன்றதேயாகும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், 1967 பொதுத் தேர்தலுக்குமுன் பேசிய பல கூட்டங்களிலும், எழுதிய எழுத்துக்களிலும், ஒரு ஆட்சியின் சாதனைகள் மதிக்கப்படவேண்டுமானால், இன்னுமொரு ஆட்சியின் சாதனைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் வாய்ப்பு ஏற்பட்டாக வேண்டும் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டி வந்தார்கள்.

காங்கிரசுக் கட்சி இருபதாண்டுக் காலம் இந்த நாட்டை ஆண்டபோது, அது செய்த சாதனைகளை, 1967க்குப் பிறகு நடைபெற்ற பல இடைத் தேர்தல்களின்போதும் எடுத்துக்காட்டியுங்கூட, கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபின் அவ்வப்போது செயல்பட்ட முறைகள் பற்றியும், எடுத்த நடவடிக்கைகள் பற்றியும், மேற்கொண்ட நல்லகாரியங்கள் பற்றியும் எடுத்துக்காட்டியபோதெல்லாம், அந்த தேர்தல்களின் முடிவு, கழகத்தின் சாதனைகளை மக்கள் ஒப்பிட்டு ஏற்றுக்கொண்டனர் என்ற முடிவைத் தரக்கூடிய வகையிலே கழகமே வெற்றிவாகை சூடி வந்திருக்கிறது. அதைப்போன்றுதான் இப்போதும் முகையூர் வாக்காளர் பெருமக்களின் முடிவு, கழகத்தின் பக்கத்திலேதான் தமிழகம் இருக்கிறது என்பதனைத் திட்டவட்டமாகத் தெரியப்படுத்தும் என்பதிலே ஐயப்பாடில்லை.

தமிழகத்திலே இதுவரையில் நடைபெற்ற இடைத் தேர்தல்களின்போது, இல்லாத ஒரு நிலைமை, இந்த இடைத் தேர்தலின்போது காங்கிரசுக் கட்சிக்கு ஏற்பட்டிருந்தது. 1967க்குப் பிறகு அந்தக் கட்சி பலவீனப்பட்டுப்போனதைவிட, இந்த இடைத்தேர்தலின்போது மேலும் பலவீனமடைந்திருந்தாலும், இந்திரா காங்கிரசின் தற்காலிகத் தலைவரான திரு. சி. சுப்பிரமணியம் இண்டிகேட் என்றும், சிண்டிகேட் என்றும் பிளவுபடும் முன்பு எடுத்த முடிவு என்பதால் முகையூர் தேர்தலில் இந்திரா அணியினர் காங்கிரஸ் வேட்பாளருக்கே வாக்களிப்பர் என்று அறிவித்திருந்ததையொட்டி, அந்தத்தரப்பு வாக்குகளும் காங்கிரசுக் கட்சிக்கே கிட்டியிருக்கும் என்பதையும் மறுக்க முடியாது.

எனவே, பலவீனப்பட்ட நிலையிலும், வாக்குகள் சிதறுண்டு, கழகம் வெற்றிபெற்றது என்று காமராசர் கூற முடியாது.

ஆகவேதான், இந்த இடைத்தேர்தல் தமிழகம் கழகத்தின் பக்கத்தில்தான் இருக்கிறது என்பதை உறுதிப்படுத்துவதாக அமைந்திருக்கிறது.

தமிழகக் காங்கிரஸ் ஒன்றுயிருந்த வரையிலும், அதற்கப்புறமும் மொழிப் பிரச்னையில் குறிப்பாக இந்தி விவகாரத்தில் தன் தெளிவான கருத்தினைத் தெரிவிக்க மறுத்து வந்திருக்கிறது. அதன் காரணமே, காங்கிரசுக் கட்சியினால் இந்தியைப் புறக்கணிக்க முடியவில்லை என்பதுதான். இந்த இருமுக வேடந்தரித்த நிலையில், காங்கிரஸ் வேட்பாளருக்கு, தமிழ் வேடந்தரித்து, பிரச்னையைத் திசைதிருப்பிவிட காங்கிரஸ் அரும்பாடுபட்டது இந்தத் தேர்தலில். தமிழை ஆதரிப்போர், திருக்குறள் கற்றவரை எதிர்க்கலாமா என்றெல்லாம் கேட்டு மேதா விலாசத்தைக் காட்டிக்கொண்டார்கள்.

காங்கிரஸ் அணியில் இருக்கும் எவரும் முழுமனத்துடன் தமிழ்த் தாய்க்குச் சிறப்புச் செய்ய முடியாது என்பதையும், உள்ளபடியே கழகம் தமிழுக்குத் தந்திருக்கிற விலையையும் நன்கு ஒப்பிட்டுப்பார்த்தே வாக்காளர் பெருமக்கள் தீர்ப்பளித்திருக்கிறார்கள்.

நாட்டுமக்கள் இந்தியப் பிரதமரின் பக்கம்தான் இருக்கிறார்கள் என்றதெளிவான உண்மையைக்கூடஒப்புக்கொள்ள மறுத்து, பிரதமரைப் பற்றியும் அவரைச் சார்ந்தோரைப் பற்றியும் தேவைக்கும் அதிகமான அளவுக்குச் சாடும் போக்கை, இத்தேர்தலில் காமராசர் கையாண்டதுகூட, வீழ்ச்சிக்கு ஒரு காரணம் என்பதை இனிமேல் கூட காமராசர் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

இவையனைத்துமல்லாமல் கழக வேட்பாளர் திருமதி பத்மாவதி அம்மையார் அவர்களது குடும்பமே கழகத்துக்கு முற்றிலும் தன்னை ஒப்படைத்துக்கொண்டு நாட்டுக்குத் தொண்டாற்றி வந்திருப்பதாகும். மறைந்த அமைச்சர் கோவிந்தசாமி அவர்களைப்பற்றி முகையூர் தொகுதியும் சரி, தமிழகமும் சரி புதிய அறிமுகம் செய்துகொள்ளப் போவதில்லை, "ஏழையாகப் பிறந்தேன்; ஏழையாகவே சாகிறேன்" என்ற மறைந்த உணவமைச்சரது அறிவிப்பில் பொதிந்திருக்கும் பல உண்மைகளை உள்ளபடியே அறிந்திருக்கும் தொகுதி முகையூர் தொகுதியாகும்.

இத்தொகுதியில் காங்கிரசுக் கட்சி, கழகத்தைப் பற்றி வண்டி வண்டியாகப் பொய் மூட்டைகளைக்கொட்டிப் பிரசாரம் செய்து வெற்றிகாண நினைந்தது, விளையாட்டுத்தனமேயாகும்.

முகையூர் வெற்றிக்கு அமைச்சர் கோவிந்தசாமி அவர்களது சேவையும், கழகத்தின் சாதனைகளுமே முக்கியப் பங்குவகிப்பவை என்று கூறிப் பெருமைப்படுகிற வேளையிலேயே, இரவு பகல் பாராது கடும் உழைப்பை மேற்கொண்டு தொகுதி முழுவதும் சூறாவளிப் பயணம் செய்து பணியாற்றிய கழக அமைச்சர்கள், தலைவர்கள் ஆகியோரது கடும்உழைப்பும், தொகுதியிலும், சுற்றிலுமிருந்து வந்து பணியாற்றிய தொண்டர்கள், ஊழியர்கள் ஆகியோரது தளரா முயற்சியினையும் பாராட்டமலிருக்க முடியாது. உடன்பட்டு, ஒத்துழைப்பு நல்கிய தோழமைக் கட்சிகளுக்கும் நன்றி உரியது.

இதைப் போன்றே தொகுதி வாக்காளர்களுக்கும் நம் பாராட்டுக்கள் உரியனவாகும்.

★



[8]

ஆம்! மறுதினம், "தேவா!" என்று குழைந்து கூறி, மலர்புரி அரசி என்மீது சாய்ந்தபோது அவளை மார்புறத் தழுவி, நெற்றியிலே முத்துமுத்தாக வடிந்த வியர்வையைத் துடைத்து கன்னங்களைத் தடவி, இதழைச் சுவைத்து "இன்பமே! இன்னுயிரே!" என்று நான் அழைத்தபோது, "இகபர சுகங்கண்டேன்! என் பூஜாபலனை உண்டேன். இந்த ஜென்மத்திலேயே தன்யளானேன்' என்று மருதம் வணங்கி, என்னை வாழ்த்தினுள். ஆஹா! சிவந்த ரோஜா போன்ற உடலமைந்த அவளுக்குத் தான் மனம் எவ்வளவு வெள்ளை! கடல்போல் இருந்தன கண்கள். கபடத்தைக் கண்டாளில்லை. அவளுடைய மிருதுவான கன்னங்களை என் கன்னத்துடன் ஒத்தியபோது, அப்போது அலர்ந்த மலரை எடுத்து ஒத்திக்கொள்வது போன்று இருந்தது. அவளுடைய அணைப்பிலே நான் சில நிமிடம், என் அணைப்பிலே அவள் சில நிமிடம், என் இதழ் முத்தம் விளைவித்தது சில நிமிடம்; அவள் இதழ் அதனைச் செய்தது சில நிமிடம்! பொழுது விடியுமாமே! இத்தகைய இன்பபுரியிலே இரவு போய் பகல் வருவானேன்!!

அந்த மறையாத வானவில், மங்காத மணம் என் வாழ்விலே, நான் கண்டறியாத களிப்பைத் தந்திடவே, நான் ஆரியனின் அடிபணிந்தேன்; திறம் வியந்தேன். அவனது இனத்தைப் புகழ்ந்தேன். 'எனக்கு இன்ப உலக வாழ்வுதந்த ஏந்தலே என்று தொழுதேன். அவன் என் நிலையையும், என்னிடம் இழைந்து கிடந்த மருதத்தின் மனதையும் நன்கு தெரிந்துகொண்டு, நாகரிகமான நாட்டியப் பொம்மைகள் என்று எம்மை மனதிலே தீர்மானித்துக்கொண்டான். அவன் எதன் பொருட்டு இவைகளைச் செய்கிருன் என்று எண்ணிப் பார்க்கும் நிலையை நான் கடந்துவிட்டேன். அந்த நிலாமுக வழகியின், நேர்த்தியான நேசத்திலே நான் நெஞ்சையும் நினைப்பையும் இழந்தேன். வேத ஜோதியே என்றுகூறி என்னைத் தஞ்சமென்றடைந்த அந்த வஞ்சியோ, கொஞ்சியும் குலவியும், வாலிபக் கோலத்தைக் காட்டியும், என்னை மகிழ்வித்தாள். பாவம் என்னுடன் சரசமாடுவதை அவள், பக்தியில் ஓர் பாகம் என்று கருதினுள்.

ராதையும் ருக்மணியும், கோபிகையரும், பிறரும் பெற்ற பேறு, இந்தச் சாமான்யளுக்குக் கிடைத்ததே! எவ்வளவு பூர்வ புண்ணியமிருந்தால் இது கிடைக்கும். ஐயனே! செந்தாமரைக் கையனே!" என்று என்னிடம் கூறினுள். தேவனிடம் சரசமாடுவது பக்திப்பாசுரம் என்று எண்ணினுள். ஆரியன் சொற்படி கேட்ட என் சொல்லை நம்பினுள். ரோஜாவிலே முள் இருந்து பறிக்கும் நேரத்திலே கையைக் குத்துவதுபோல், அவளது சரசத்திலே பக்திசாயல்

இருப்பது காண, என் மனம் சற்று வேதனைப்பட்டது. சாமானிய மானிடன்! கலிங்கத்திலே பிறந்து, கட்கத்தை நம்பி வாழும் களத்துக் கூளம்! என்பது தெரிந்தால், அவள் என்னைத் தீண்டுவாளோ! சந்தேகமே! பருவம் அவளுக்கு அந்த நினைப்பினைக் கொடுப்பினும், அரசி என்ற நிலை, அவளைத்தடுத்து விட்டிருக்கும். நானும் "தேவஜோதி" என்ற "தில்லு"க்கு உடன்பட்டிராவிட்டால், வான வீதியிலே உலவும் மதிகண்டு மகிழ்வதுபோல், மருதம் உப்பரிகைமீது உலாவுவதைக் கண்டு மகிழ்வதோடு தீர்த்துவிட்டிருக்கும். கண்களுக்கு விருந்து, கருத்துக்கு நோய் என்று இருக்கும்.

பிரதி இரவும், நறுமணம் வீசும் தைலம் பூசிய கூந்தலில் முல்லை சூடி, முறுவலுடன், மருதம் கோயில் வருவாள். நான் தேவவடிவும், வாலிபத் துடிப்பும் கொண்டு அவளை வரவேற்பேன். அவள் தொழுவாள், நான் தழுவிக்கொள்வேன். "தேவா" என்று அடிமூச்சுக் குரலாலே என்னை அழைப்பாள். அணைப்பைத் தளர்த்தாமல் 'அன்பே!' என்று நான் கூறுவேன். இதழ்கள் பிறகு இணைபிரியா. சில நிமிடங்கள்! இந்த இன்பம். பல நாள், பல வாரம், பலமாதம், அவள் "தாய்" ஆகும் நிலைபெறும் வரை! திருக்கோயிலிலே, தேவ பூசாரியின் திருவருளால், நடந்த திருவிளையாடல், இந்த அளவு வரை சென்றது. பகவத் பிரசாதத்தைத் தாங்கும் புண்ணியம் பெற்றேன், என்று பூரித்தாள் அந்தப் பூவை. தேவன் என்ற பாவனையையும் மறந்து, தந்தை என்ற நிலையிலே, "ஊர் அறிந்தால்?" என்று கேட்டேன் மருதத்தை. கள்ளமற்ற அவள் மெள்ளச் சொன்னாள், "தேவா! உமது லீலா விநோதத்தை நான் என்ன கண்டேன்? தங்கள் சித்தம்போல் நான் நடப்பேன்." எனக்கு, தேவப் போர்வையைக் கழற்றி எறிந்துவிட எண்ணம் பிறந்து "மருதம்! என் கண்ணே! உன்னை நான் ஏமாற்றிவிட்டேன்" என்று துவக்கினேன். உண்மையைக்கூறிட. ஆரியனின் புனைந்துரையை நம்பிய அவளோ, புன்னகையுடன், "என்னை ஏமாற்றுவது உமது விளையாடலிலே ஒன்றுபோலும்!" என்று கூறி, முத்தமிட்டாள்.

என் சித்தம் தடுமாறிற்று. பொன்விலங்கு எனக்கும் அவளுக்கும்! அதன் திறவுகோல், அந்தப் பூசாரியிடம். சாலையிலும் சோலையிலும், சிற்சில சமயங்களிலே அரண்மனையிலும் யாருங்காணாத சமயத்திலே நாங்கள் சரசமாடினோம். என் சுமையை இறக்கச் சமயம்மட்டும் கிடைக்கவில்லை. நான் தேவனாகவே இருந்தேன்-திருக்கோயிலிலேயே, என் மகள் பிறந்தாள்–பாகீரதியின் மாலையை உதிர்த்து, தூவினான் ஆரியன்.

'தங்கள் வரப்பிரசாதம்' என்று குழைந்து கூறினாள் மருதம், தலைகுனிந்து நின்றேன் ஒரு விநாடி. பிறகு அந்தக் குழந்தையைக் கண்டேன், வாரி அணைத்தேன், முத்தமிட்டேன், கண்களில் நீர் கசிந்திட நின்றேன். பாவனையையும். பாசாங்கையும் வென்றேன். கபடத்தைக் கொன்றேன். திடமனதுடன். மருதம்! நமது குழந்தை மீது ஆணையிட்டு இதைக் கூறுகிறேன், என்னை நம்பு, நான்

தேவனுமல்ல, ஜோதியுமல்ல, உன்போல் மானிடப் பிறவிதான். நான் கலிங்க நாடு, தொழில், போர் புரிவது; நான் இந்தப் பக்கம் வந்தபோது, ஆரியன், என்னை தேவ சொரூபம் என்றுரைத்து உனக்குத் தந்தான். நீ எனக்கு உல்லாசந் தந்தாய்! அதன் விளைவு, இதோ விளையாடுகிறது. இனி இந்த மானிடனை நீ ஏற்றுக்கொள்வதும், தள்ளுவதும் உன் இஷ்டம். இனி இந்தத் தேவபாவனையை நான் தாங்கேன்'' என்று கூறினேன். என் தேவ கிரீடத்தை வீசி எறிந்தேன். மலர் மாலைகளைப் பிய்த்து எறிந்தேன். அணிகளைக் கழற்றி வீசினேன். அவள், "தேவா ! தேவா !'' என்று கூறித்தேம்பினாள்! நான் மயக்கமுற்றேன். பிறகு என்ன நடந்ததென்பது எனக்குத் தெரியாது. பலநாட்களுக்குப் பிறகு, நான் கலிங்கத்தில் என் வீட்டிலே காய்ச்சலுடன் இருக்கக் கண்டேன். யாரோ பல்லக்கில் கொண்டுவந்து என்னைவிட்டுப் போயினர் என்று கூறினர். மீண்டும் மலர்புரிபோகத் துணிவு பிறக்கவில்லை. சேதியை வெளியே சொல்லவும் பயமாக இருந்தது! கவலையைப்போக்க, கட்கமெடுத்து, கங்கைக்கு மேலேயும், காமரூப நாட்டிலுமாகப் பத்து ஆண்டுகள் திரிந்தேன். மருதம் என்ன ஆனாள். குழந்தை என்ன ஆயிற்று, கோயில் பூசாரி என்ன ஆனான்? என்று கொந்தளிப்பு உண்டாகவே, மாறுவேடம் புனைந்து மலர்புரி சென்று பாகீரதி கோயிலில் தங்கினேன். வந்தான் பூசாரி. சற்று வயோதிகனாக் காணப்பட்டான்; அவனை விசாரித்தேன். ஆரியன் ஆயாசப்படாது பேசினான். "ஆம்! பத்து ஆண்டுகள் பறந்துவிட்டன! பாலப்பருவம் மாறிவிட்டது. மருதத்தின் பக்தி சிரத்தையும் குறைந்துவிட்டது. அவள் இன்னமும் உன்னை தேவனென்றே கருதுகிறாள்! திருவிளையாடல் தீர்ந்துவிட்டது. தேவன் மறைந்தான் என்று தினமும் கூறுகிறாள். அன்று நீ பைத்தியக்காரத்தனமாக நடந்துகொண்டாய். உனக்கு காய்ச்சலை வருவித்து, அவள் கண்படாமல் மறைத்துக் கலிங்கத்துக்கு அனுப்பினேன். காலை நீ மீண்டும் இங்கு வந்தால் என்னசெய்வதென்று கலங்கினேன். வந்தால், வாளுக்குத்தான் பாவம், இரையாகிஇருப்பாய். நீ புத்திசாலித்தனமாகப்பத்தாண்டுகளாக இப்பக்கமே தலைகாட்டவில்லை'' என்று பேசினான். என் மனம் கொதித்தது! எவ்வளவு துணிவு இவனுக்கு என்று கோபம் பிறந்தது; என் செய்வது! "ஆரியரே! நான் மருதத்தை மீண்டும்......'' என்று கேட்டேன், "முடியாது! முடியாது! அந்தப் படலம் முடிந்துவிட்டது'' என்று தீர்மானமாகக் கூறிவிட்டான் தீயன். "என் குழந்தை எங்கே?'' என்று கேட்டேன். அவன் புன்னகையுடன், தேவப் பிறவி தேவரடியாளாக இருக்கிறாள்! என்று திமிராகப் பேசினான். "எங்கே இருக்கிறது குழந்தை?'' என்று கெஞ்சினேன். "தெரியும்! கூறமுடியாது. அவள் வாழ்கிறாள், வசீகரமிக்க வனிதையாவாள், உனக்கேன் கவலை! மருதம் உன் சொப்பனத்திலே கண்ட சுந்தரி என்று எண்ணிக்கொள். குழந்தையும் கனவிலே ஓர் கனி! மீண்டும் அவர்களுக்கும் உனக்கும் தொடர்பு இல்லை — ஏற்படாது — ஏற்படுத்த முடியாது'' என்று கூறிவிட்டான். மலர்புரியில் அந்தச் சமயம் அவனுக்கு இருந்த அதிகாரம், அரசிக்கே அவன் விருப்பினால் ஆபத்தைத் தரக்கூடியதாம்! எனவே நான் அவனை எதிர்க்க அஞ்சி. "ஆரியரே, எனக்குக் குழந்தைமீதே கவனமாக இருக்கிறது'' என்று மீண்டும் கெஞ்சினேன். ஆரியன் நீலமணியை என்னிடம் தந்து, இதுஉன் பெண்ணின் காதிலே தொங்கிய அணி. இதைஞாபகப்பொருளாக வைத்துக்கொள். அவள் சுகமாக இருக்கிறாள். நீ உடனே ஊரைவிட்டுச் செல்'' என்று கட்டளையிட்டான்.

"சோழ வீரனே இதோ பார், என் கழுத்தில் தங்கச் சங்கிலியில் கோர்த்துக் கட்டப்பட்டுள்ள இந்த நீலமணி. இதுதான் என் கண்மணியை எனக்குக் கவனமூட்டுகிறது. இந்த நீல மணியைக் காதிலே அணிந்திருந்த பெண்ணைத்தான் நீ தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்'' என்று கூறி கலிங்க வீரன் தன் கதையை முடித்தான். நீலமணியைக் கையிலேஎடுத்ததும், வீரமணிக்கு, கலிங்கக்கிழவன் கூறியது மறந்துவிட்டது," இந்த நீலமணி நமது நடனத்தின் செவியிலே இருப்பின், மிகமிகச் சிங்காரமாக இருக்குமே'' என்ற நினைப்புத் தோன்றிற்று.

[வளரும்]

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் பொதுச்செயலாளர் அறிக்கை

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகக் கிளையினைத் தலைமைக் கழகத்தில் பதிவு செய்கின்ற கடைசி நாள் 30—12—69 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த நாளுக்குப் பிறகு பதிவு செய்கின்ற கிளைக் கழகங்கள் நடைபெற விருக்கின்ற கழக நடவடிக்கைகளில் அதிகாரபூர்வமாகக் கலந்துகொள்ள இயலாது.

1968—69 ஆம் ஆண்டில் கல்வி நிலையங்களில் பயின்ற மாணவர்கள் எந்தக் கல்வி நிலையக் கிளைக் கழகத்திலும் உறுப்பினராகச் சேர்ந்துகொள்ளும் வாய்ப்பு இல்லாவிட்டால் ரூ 1- உறுப்பினர் கட்டணமாகச் செலுத்தி தலைமைக் கழகத்தில் பதிவு செய்துகொள்ளவேண்டும்.

தலைமைக் கழகத்தில் பதிவு செய்துக்கொள்ள விரும்புகிறவர்கள் 1968—69—ஆம் ஆண்டில் தாங்கள் மாணவர் என்பதற்குத் தக்க சான்றுகளுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

முகவரி:

S. D. சோமசுந்தரம்,
பொதுச்செயலாளர்,
தி. மா. மு. கழகம்,
12, முதல் தெரு,
நந்தனம், சென்னை-35.

அன்பன்,
S. D. சோமசுந்தரம்,
பொதுச்செயலாளர்.
தி. மா. மு. கழகம்.

ஒருவனை நினைத்தவள்

உடுமலை-நன்னன்

குறுக்கே இருப்பதெல்லாம் ஒரு நாள்தான். அதற்கு அடுத்த நாள் மணிக்கண்ணன் மறுபடியும்—செங்குன்றம் நகருக்கே போகும் நிலைவந்துவிட்டது. அந்த நகரத்தை விட்டு வெளியேறி சரியாக ஒரு வருடம் கழிந்த கணக்காக மணிக்கண்ணன் நினைவில் நின்றது.

அவன் ஓராண்டுக்கு முன்னால் சாதாரண ஆசிரியனாக செங்குன்றம் நகரைவிட்டுப் பூங்குன்றம் சேர்ந்தான். ஆமாம், வந்து சேர்ந்துவிட்டான். இப்படித்தான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஏனென்றால் அவன் மனம் நொந்துகிடந்தநேரம் அது. இல்லையில்லை ஏமாற்றம் அடைந்த வேளை அது.

இடுக்கண், இயலாமை, பலவீனம் இப்புடிப்பட்ட வார்த்தைகள் அகராதியில் மட்டும் இல்லை. ஒவ்வொரு மனிதனின் இதயத்திலும் இருக்கிறது.

எங்கோ பிறந்து எப்படியோ வளர்ந்து அனாதையான மணிக்கண்ணன் ஆசிரியன் என்ற அடைமொழி பெற்று துவக்கத்திலேயே செங்குன்றம் வந்தவன் சாதாரண பள்ளி ஆசிரியனாகத் தொழில் பார்த்தான் அப்போதுதான் அவன் வாழ்க்கையில் ஒரு திருப்பம், அது திருப்பமா?...அல்லது......அதை என்னவென்று குறிப்பது? மணிக்கண்ணனுக்குப் புரியவில்லை. செயலற்று அந்தச் சின்ன அறையிலே உட்கார்ந்திருந்த அவனுக்கு செங்குன்றம்நகரில் அவன் வாழ்ந்துவந்த பழைய நாட்கள் மீண்டும் அவனுடைய எண்ணத்தில் அலையாக எழுந்தன.

செங்குன்றம் நகர் ஒரு மலையடிவாரத்தை ஒட்டியிருக்கிறது. இயற்கைஅழகோடு செயற்கை அழகும் இணைந்து அந்த நகருக்கு நல்ல சிறப்புத்தந்தது. நகரிலுள்ள மாட மாளிகைகளும் மலைச்சரிவிலுள்ள மரம் செடி கொடிகளும் வண்ணக் கோலமிட்டு கண்ணைக் கவர்ந்தன.

மாலை நேரங்களில் பள்ளி முடிந்த பிறகு மணிக்கண்ணன் மலையடிவாரத்தின் பக்கமுள்ள நீரோடைக்குப் போய்விடுவான். அங்கே குளித்து மகிழ்வது அவன் வழக்கம்.

ஒரு நாள் அவன் அங்கேகுளித்துக் கொண்டிருக்கும்போது ஒரு காட்சியைப் பார்த்தான். சற்று தூரத்தில் ஒரு பெண் மலர் பறித்துக்கொண்டிருந்தாள். அவளைப்பெண்என்பதா? இல்லை, வனதேவதை என்பார்களே அப்படி இருந்தாள். குளித்துக்கோதி முடிந்திருந்த அவள் கூந்தலும் அன்னத் தூவி என்று சொல்லுவார்களே அப்படி மெல்லிய அவள் மேலாடையின் அசைவும், குலுங்கும் அவள் கரத்தின்வளையல்களும், படபடக்கும் சிறு மணி விழிகளும், மலர் பறிக்கும் நெளிவான அங்கத்தின் எழிலும்...

எழிலும்....எழிலும்......இப்படியே சொல்ல வைத்து மணிக்கண்ணனைப் பித்தனாக்கிவிட்டது அவள் அழகு. அன்றே அவன் மனம் கோட்டை கட்டத் துவங்கியது. 'வாழ்ந்தால் அந்தப் பெண்ணோடு வாழவேண்டும். இல்லாவிட்டால் வெறும் மனிதனாகவே இருந்துவிடலாம்' இப்படி அவன் மனம் தீர்மானித்தது.

பின்னும் ஒரு நாள். மணிக்கண்ணன் நீரோடைக்குப் போனான். நோக்கம் குளிப்பதாக இருந்தாலும் அவன் நினைவெல்லாம் மலர் பறித்த கன்னிமீதுதான் இருந்தது, அவளைப் பற்றி எல்லா விபரமும் அறிய வேண்டுமென்று அவனையும் அறியாமல் ஆசை வெளிப்பட்டது. ஓடையின் பக்கம் அவன் போன போது—

"'அம்...மா...வ்..." என்ற அலறல் ஒன்று தெறித்துவந்தது—ஓசை வந்த இடத்தை நோக்கி ஓடினான் மணிக்கண்ணன். முல்லைக்கொடியோரம் அஞ்சி நடுங்கியவளாக மலர்பறித்த கன்னி நின்று கொண்டிருந்தாள். அவளுக்கு அந்தப்பக்கம் காட்டு நரியொன்று நின்றிருந்தது. அதைப்பார்த்துதான் பயந்துவிட்டாள் அவள். ஓடிப்போன மணிக்கண்ணன் அந்தநரியை விரட்டினான். அது எங்கோ ஓடிமறைந்தது. அந்தக் கன்னியைப்பார்த்து மணிக்கண்ணன் கேட்டான்:

'இந்தப் பக்கம் இப்படித் தனியா வரலாமா?'

"நான் எப்பவும்தான் வர்றேன். இன்னிக்குதான் நரியைப் பார்த்தேன்" என்று அவள் பயந்த குரலில் சொல்லி முடிப்பதற்குள் மணிக்கண்ணன் குறுக்கிட்டு—

'உடனே பயந்து சத்தம் போட்டியோ!'' என்று கொஞ்சம் கிண்டலாகக் கேட்டான்.

"ஆமா......பயந்திட்டேன்......." என்று இரண்டு கைகளையும்—பிசைந்து கொண்டு முறுவலித்தாள் அவள். அந்த முறுவலின் எழில் கண்டு மணிக்கண்ணன் மயங்கினான். அந்த நிகழ்ச்சிதான் அந்த இருவருக்கும்—இனம்புரியா இணைப்புக்குக்கால்கோளாய் ஏற்பட்டது.

அதன் பிறகு—

அடிக்கடி அந்த நீரோடையின் பக்கம் இந்த இரண்டு உள்ளங்களும் சந்திக்க முற்பட்டன. ஒருமுறை மணிக்கண்ணன், அந்தப் பெண்ணிடம் அவள் கேட்காமலேயே

தன் பெயரைச் சொன்னான். அவள் தன் பெயரைச் சொல்லவேண்டும் என்பதற்காக. அவளும் மாதவி என்று தன் பெயரைச் சொன்னாள். இப்படிப் பெயரைச் சொல்லிக் கொண்டதன் மூலம் அவர்களின் தொடர்புக்கு இன்னும் வலிமை பிறந்தது.

அரும்பு மலரும்போது உதிர்ந்து விடுவதும் உண்டு. பொழுது கிளம்பும்போது மேகம் மறைப்பதும் உண்டு. இப்படி எப்போதும் நடப்பு தில்லை.

ஆனால், எப்போதாவது நடக்கா மலும் இருப்பதில்லை.

மணிக்கண்ணனும், மாதவியும் அந்த மலையடிவாரத்தில் தினமும் பாடித்திரிந்து பரவசமடைந்தனர். ஊர் அறியாத முறையில், உலகறி யாத விதத்தில், அந்த இளஞ் சோடி இதயங்களின் உறவு வளர்ந்து வந்தது. அதோடு அவர் கள் அறியாத ஒரு சோதனையும் அவர்களுக்காகவே பிறந்து வந்தது. அப்படியென்றால்?

மாதவி என்ற மலர், மணிக்கண் ணன் என்ற நாரில் இணைந்து மணம் வீசாமலே போய்விட்டது! இதற்குப் பெயர் விதியா? துணிவில் லாதவர்களுக்கு 'விதி' யாகவும் துணிந்தவர்களுக்கு 'சதி'யாகவும் அது மாறுமோ?

அனாதையான மணிக்கண்ணன் சாதாரண பள்ளி ஆசிரியன் என்ற காரணத்தால் அவனைப் புறக் கணித்துவிட்டு, மாதவியின் பெற் றோர் அதே ஊரிலுள்ள ஒரு பணக் காரன் மகனுக்கு மாதவியைத் திருமணம் செய்து வைத்தார்கள். அதே சமயத்தில் மணிக்கண்ண னும் அவன் செய்யும் உத்யோ கத்தில் மாற்றலாகி பூங்குன்றம் போகவேண்டியவனானான். அவனும் ஏமாற்றத்துக்கும், ஏக்கத்துக்கும் ஆளாகி செங்குன்றத்தை விட்டுப் புறப்பட்டான்.

• • •

இப்போது மீண்டும் செங்குன்றத் துக்கே மாற்றலாகி ஒரு சிறு மாறுத லுடன் போகப்போகிறான்! போன வருடம் சாதாரண ஆசிரியனாக செங்குன்றத்தைவிட்டு வந்தவன் இப்பொழுது தலைமை ஆசிரியன் என்றசிறப்போடு அங்கே போகிறான்

அவன் செங்குன்றம் நகர்போய்ச் சேர்ந்தான். அன்று மாலை பள்ளி முடிந்து, பழைய நினைவுகளோடு ஏரோடைப்பக்கம் நடையைக் கட்டி

சொன்னதும்.....சொல்லாததும்

காங்கிரஸ் தலைவர் பதவியைக் கொடுத்தால் ஏற்கமாட்டேன். 'காங்கிரசில்' எந்தப் பதவியை யும் நான் விரும்பவில்லை.

—திரு. பக்தவத்சலம்

இவ்வளவுதூரம் 'வேலைமெனக் கெட்டு' வந்து ஆளும் காங் கிரசை ஆதரிக்கிறேனே ஒரு கவர்னர் பதவி, ஒரு தூதர் பதவி என்று கொடுத்தால் என்னவாம்?

இந்திராவின் சோசலிசப் பேச் சில் ஏமாறாதீர்கள்.—திரு. காமராஜ்

இதுவரை எங்கள் சோசலிசப் பேச்சில் ஏமாந்ததைப்போல!

கணக்கில் வராத கறுப்புப் பணத்தைக் கண்டு பிடிப்பதிலும் அப்படித் திருட்டுத்தனம்பண்ணு கிறவர்களைத் தண்டிப்பதிலும் அரசு ஆர்வம் காட்டுகிறது. ஆனால் அது அவ்வளவு எளி தான செயல் அல்ல.

—திருமதி இந்திரா

ஏனென்றால் அப்படிப்பட்டவர் கள் என்னுடைய நிழலிலேயே புகுந்துகொண்டிருக்கக் கூடும்! என் தந்தையார் காலத்திலிருந்து வரி கட்டவேண்டிய நினைவே இல்லாமல் ஜெகஜீவன்ராம்ஜி இருக்கவில்லையா?

என் புத்திமதியை ஒருவரும் கேட்பதில்லை.

—திரு. இராஜாஜி

'என் புத்திமதியைக் கேளுங் கள்' என்று இனிமேல் புத்தி சொல்லப் போகிறேன். விடப் போவதில்லை!

'வறுமையேவெளியேறு' என்று திட்டம் தீட்டப்போகிறோம்.

—திரு. சுப்பிரமணியம்

குழம்பாதீர்கள்! மூன்று ஐந் தாண்டுத் திட்டங்களை நீங்கள் பார்த்ததில்லை?......அதே மாதிரி தான்! அதிலும் கவனிங்கள்; திட் டத்தைத் தீட்டத்தான் போகி றோம். நிறைவேற்றுவோமா என் பதை இப்போது சொல்லமாட் டேன்.

ஆட்சேபிக்கத்தக்க உத்தி களைக் கையாண்டு பிரதமரா வதைவிட 'சத்தியவான்' என்று பெயரெடுக்கவே நான் விரும்பு கிறேன்.

—திரு. மொரார்ஜி

பின்னே என்னையா? எடுத் தால் 'பிரதமர்' என்று பெயர் எடுக்கவேண்டும். என்றால் 'துணைப்பிரதமர்' என்றுதான் பெயரெடுக்க முடிந்தது. இப் போது அதையும் 'எடுத்து'விட் டார்கள். எனக்கு மட்டும் எடுக் கத் தெரியாதா? நான் "சத்திய வான்" என்ற பெயரை எடுத்து விட்டுப்போகிறேன்!

சோசலிச சமுதாயம் அமைக்க அவசரப்படக்கூடாது.

—திரு. டி. டி. கே.

அவசரப்பட்டு அமைத்துத் தொலைத்துவிட்டால் என்னைப் போல எண்ணற்ற கம்பெனிகள் வைத்திருப்பவன் கதியெல்லாம் என்ன ஆவது?

காங்கிரஸ் இரண்டாகப் பிளக்கவில்லை.

—திரு. தினேஷ்சிங்

நாங்கள்தான் இரண்டாகப் பிரிந்துவிட்டோம்! எதிர்க்கட்சிக் காரர்கள் காங்கிரசைப் பிளந்து பெருமை தேடிக்கொள்ளப் பார்த் தார்கள்! விடுவோமா, அந்தப் பெருமையை அவர்களுக்கு? காங் கிரஸ் எங்களுடையதாயிற்றே!

—மலையமான்.

ளான். மேற்குத் தெரு வழியாகப் போய் தெற்கே திரும்பினான். அந்தத் திருப்பத்தில் மொட்டை மாடியாக ஒரு வீடு கம்பீரமாகக் காட்சி தந்தது. அதுதான் மாதவி புகுந்த வீடு. அதன் பக்கமாகப் போன மணிக்கண்ணன் ஆவலாக அந்த வீட்டைப் பார்த்தான். என்னவோ பொருளற்ற ஆவல் அது. அவனுடைய பார்வை, வெளிவாசல், திண்ணை, தோட்டம். முதலிய இடங்கள் மீதெல்லாம் பாய்ந்தது. எங்காவது மாதவி நின்றிருப்பாளா, நின்றிருந்தால் பார்க்கமாட்டாளா, பார்த்துவிட்டால் வீட்டுக்கு அழைக்கமாட்டாளா? இப்படி பல நினைவுகளுடன் மெல்ல நடந்து அந்த வீட்டைக் கடந்து சென்றான். பாவம், அவன் பார்வைக்கு அவள் தென்படவேயில்லை. இந்தவேளைக்கு அவள் தன் கணவனுடன் மாலைச் சிற்றுண்டி கொடுத்துக் கொஞ்சிக் கொண்டிருக்கலாம், அல்லது அவர்கள் தங்கள் வாழ்வு ரகசியத்தைப் பேசி சிரித்து இன்பக்கனவில் இருக்கலாம். மாதவிக்கு என்ன குறைச்சல்!

அவளைப்பற்றிப் பலவாறு சிந்தித்துக்கொண்டு மணிக்கண்ணன் தெற்குத் தெரு வழியாக நடந்தான். மருத்துவமனையைத் தாண்டி, பூங்காவைக் கடந்து நூலகக் கட்டட வழியாகப் போனான்,

ஒரு வருஷத்துக்குப் பின் அந்த ஊருக்கு அவன் திரும்பி வந்திருக்கிறான் என்றாலும் கடந்த ஓராண்டில் சில மாறுதல்கள் அந்த ஊரில் சிறப்பான அம்சமாக ஏற்பட்டிருந்தது.

மருத்துவமனையைச் சுற்றிலும் முன்பிருந்த கம்பிவேலியை நீக்கிவிட்டு இப்போது அழகான காம்பவுண்டுச் சுவர் கட்டப்பட்டிருந்தது. பூங்காவில் சிறிய குளம் ஒன்று வெட்டப்பட்டிருந்தது: அதற்கு முன்புறம் சில பூந்தொட்டிகள் வைத்து கட்டடத்தின் அழகை அதிகப்படுத்தியிருந்தார்கள்.

ஊரைக் கடந்தான் மணிக்கண்ணன். ஊருக்கு வெளியே சற்று தொலைவில் ஒரு வீடு தனியாக இருந்தது. அது புதிதாகக் கட்டப்பட்ட வீடல்ல. வெகுகாலமாக அந்த வீடு அங்கே இருக்கிறது. அதையும் பார்த்தான் மணிக்கண்ணன். அந்த வீடும் கொஞ்சம் மாறுதலாகத்தான் இருந்தது. போன வருடம் அந்த வீடு கூரை பிய்ந்து சுவரெல்லாம் இடிந்து காணப்பட்டது. ஆனால் இந்த வருடம் கூரை வேய்ந்து சுவரெல்லாம் செம்மைப் படுத்தப்பட்டு நீலவர்ணத்தில் சுவர் அழகு செய்யப்பட்டிருந்தது. அது தனிப்பட்ட எந்த ஒருவருக்கும் சொந்தமானதல்ல, மனத்தெளிவில்லாதவர்களுக்கு மட்டும் சொந்தமானது. ஆமாம். பைத்தியம் பிடித்தவர்களை அந்த வீட்டில் போட்டு அடைத்துவிடுவார்கள். பைத்தியங்கள் போடும் சத்தமோ, மற்ற ரகளையோ, ஊர்க்காரர்களைப் பாதிக்காமல் இருப்பதற்காகவே அந்த வீட்டை ஊருக்கப்பால் கட்டி வைத்திருக்கிறார்கள். அந்த வீட்டை பார்த்துக் கொண்டே மணிக்கண்ணன் நீரோடைக்குப்போய்ச் சேர்ந்தான்.

ஏனோ குளிக்கவேண்டுமென்ற ஆர்வமே அவனுக்குக் கொஞ்சமும் எழவில்லை. அங்கே இருந்த ஒரு பாறை மீது அமைதியாக உட்கார்ந்து கொண்டான்,

கொடியிலுள்ள மலர்களின் மணம் காற்றோடு கலந்து பரவிக் கொண்டிருந்தது முன்பொருநாள் நரியைக் கண்டு பயந்து மாதவி அலறினாளே அந்த நினைவு மணிக்கண்ணனுக்கு இப்போது மலையாக எழுந்து நின்றது.

குழப்பமான நினைவுகளோடு மணிக்கண்ணன் குளிக்காமலே ஓடையைவிட்டுக் கிளம்பினான். உழுதமாட்டைப்போல அசைந்து நடந்தான். கொஞ்சதூரம் போயிருப்பான்.

“ஓ” என ஒரு கீச்சுக் குரல். யாருடைய குரல், எங்கிருந்து வந்தது? நடந்துகொண்டிருந்த மணிக்கண்ணன் அப்படியே நின்று அந்தக் குரலைக் கவனித்தான் “ஓ...உய்...ய் ...அதே குரல். மணிக்கண்ணன் அந்தக் குரல் வந்த இடத்தை சில விநாடிகளில் அறிந்து கொண்டான். பைத்தியங்களுக்காகக் கட்டப்பட்டிருந்த அந்தத் தனி வீட்டிலிருந்துதான் அந்தக் குரல் வெளியே வந்தது. மணிக்கண்ணன் அந்த வீட்டை நோக்கி நடந்தான். அவன் அந்த வீட்டை நெருங்க நெருங்க எந்த விதமான சத்தமும் வெளிவரவில்லை. வீட்டுப்பக்கம்போன அவன் அதைச் சுற்றி வந்தான். அங்கே சூழ்ந்த அமைதி அவனுக்கு ஒரு விதமான அச்சத்தை உண்டாக்கியது. வீட்டின் வலப்புறச் சுவரில் ஒரு சன்னல் இருந்தது. அதன் வழியே உள்ளே பார்த்தான். பொழுது மங்கலான நேரமானதால் உள்ளே யாரும் கண்ணுக்குப் புலப்படவில்லை. மீண்டும் திரும்பி நடந்தான்.

‘களுக்’ என்ற சிரிப்பு கலகலப்பாக வெளிப்பட்டது. திரும்பிய மணிக்கண்ணன் மறுபடியும் திரும்பி அந்த சன்னல் பக்கம் போனான். உள்ளே சன்னல் ஓரம் ஒரு பெண்! பெண்ணா அல்லது பே...யா?

“எனக்குக் கல்யாணமே ஆகலே யாரும் கேட்காமலே உள்ளே இருந்தவள் அவளாகப் பேசிக்கொண்டு சிரித்தாள். சில விநாடிகளில் சிரிப்பு அடங்கி அழுதாள். சன்னலோடு ஒட்டி நின்றவளைக் கூர்மையாகக் கவனித்தான் மணிக்கண்ணன். அவ்வளவுதான் அவன் இதயத்தில் கோடிக்கணக்கான ஊசிகள் ஏறியதுபோல பெரும் அதிர்ச்சிக்கு ஆளானான்.

மாதவி பைத்தியக்காரியாக நின்றிருப்பதைக் கண்டான். அவன் கண்களில் நீர் அருவியாய்க் கொட்டியது. அவனை மாதவியும் பார்த்தாள். அவன் அழுவதைப்பற்றி அவள் கேட்கவில்லை. பைத்தியக்காரி எப்படிக் கேட்பாள்? அவள் தன் வாழ்க்கையில் முதன்முதலில் சந்தித்ததே மணிக்கண்ணனைத்தான். அவனையே கணவனாகவும் எண்ணியவள் அவள். எவன் ஒருவன் மீது எவள் ஒருத்தி ஆசை வைக்கிறாளோ அவன் ஒருவனே அவளுக்குக் கணவன். என்ற தீர்மானம் கொண்டவள் மாதவி, அவளை இந்த சமுதாயம் புரிந்து கொள்ள முடியவில்லை. அவள் கற்பின் தன்மையை அறிந்து கொள்ளவுமில்லை.

யார் அறிந்தாலென்ன அறியாவிட்டாலென்ன அறியவேண்டிய மணிக்கண்ணன் அறிந்திருக்கிறான். அதனால். பைத்தியக்காரியாக இருந்தாலும், மாதவியின் உள்ளம் சாவிலேயாவது நிச்சயமாக அமைதிகொள்ளும்.

அவள்தான் ஒருவனை நினைத்தவளாயிற்றே!

★

சுதந்திரம்

சுவர்க்கத்திலே என்னைச் சிறை வைத்தாலும் நான் அதன் பளிங்குச் சுவர்களைத் தாண்டி வெளியேறவே விரும்புவேன். எனக்குச் சுதந்திரமே தேவை,

—டிரைடன்.

நிலா

ஒட்டுவைத்தத் துணிபோன்று நிலவு வானில்
ஒட்டிக்கொண் டிருந்தது!முன் இரவு நேரம்!
பொட்டுவைத்த என்மனைவி வரவுக் காகப்
புரண்டபடிப் படுத்திருந்தேன்! என்ம னைவி
சுட்டுவைத்த அப்பம்போல் வந்தாள்! "பிள்ளைத்
தூங்கிடுதோ?" என்றுரைத்து எனையணைத்துப்
பட்டுவைத்தக் கன்னத்தைக் கொண்டு வந்துப்
பதித்திட்டாள் என்னிதழில்! வான்ப றந்தேன்!

கள்ளிறக்கும் தென்னையிள மரமே! நன்றாய்
கனிந்திருக்கும் மாம்பழமே! பலாப்ப ழத்தின்
உள்ளிருக்கும் சுவைசுளையே! தடையி ருக்கும்
உடையெதற்கு உடையிறக்கம் செய்வாய் என்றேன்
எள்ளிறக்கம் செய்வதற்கும் இடமில் லாமல்
இதழமுத்திச் சுவைத்திட்ட நிலவின் தங்கை
தள்ளிநின்று இறக்கத்தைச் செய்தாள்! அங்கே
தமிழமுதின் சுவைகண்டு மெய்ம்ம றந்தேன்!

"இன்பத்தைக் கூட்டுதற்கும்; எனைய ணைத்து
இரவுதனைக் கழிப்பதற்கும்; இனிய தேனை
முன்னிதழில் பெருக்கிவைத்து என்னு தட்டில்
முத்தத்தின் வழிவகுத்து அளிப்ப தற்கும்;
சின்னஅறைப் பள்ளியினில் கணக்காய் கற்றுத்
தேர்ந்தவளே!" என்றேன்நான்! "மேலும் கீழும்
பின்னங்கள் போல்நாமும் ஆகும் முன்னே
பின்னுங்கள் எனை"யென்றாள்! அணைத்துக்கொண்
டேன்!

"கனிவெட்டிக் கன்னத்தை அமைத்து; ஓடும்
கார்வெட்டிக் கூந்தலினை அமைத்த மாதே!
தனிவட்டி அறிவாயா?" என்றேன்! "முத்தம்
தந்துவிட்டுக் கேளுங்கள்! முதலுக் கேற்பத்
தனிவட்டி மட்டுமென்ன! வேண்டு மென்றால்
தப்பாது கூட்டுவட்டிக் கிடைக்கும்" என்றாள்!
"பனிவொட்டிக் கொள்வதுபோல் எனது மார்பில்
பாய்ந்தொட்டிக் கொள்ளும்வான் நிலவே!
என்றேன்!

"வான்நிலவு என்றீரே எங்கே யேனும்
வான்நிலவும் காதலனை அணைப்ப துண்டோ?
தேன்நிலவும் இதழுண்டோ? முத்தந் தன்னை
தித்திக்கத் தருவதுதான் உண்டோ" என்றாள்!
"மான் உலவும் கானகத்தில் மலர்ந்து வந்த
மல்லிகைப்பூ போன்றவளே! தன்த லைவன்
வான்என்னும் காதலனை நிலவ ணைத்து
வாய்முத்தம் தரப்பார்த்த தில்லை யோநீ?"

"நிதம்முத்தம் நிலவுமகள் ஈவ துண்டு!
நிலத்தினிலே விழும்பனிநீர் எல்லாம் அன்னாள்
இதழ்தெரிக்கும் எச்சில்தான்! 'நிலவி னுக்கு
இதழுண்டோ? எனக்கேட்டாய்! ஆமாம்கண்ணே
இதழுண்டு! முகந்திருப்பி வானை முத்தம்
ஈவதினால் இதழ்நமக்குத் தெரிவ தில்லை!
நிதம்வானில் இரவில்நாம் கண்ப தெல்லாம்
நிலவின்பின் பக்கந்தான் அறிவாய்!" என்றேன்!

"உருள்கின்ற வெண்ணிலவைப் பற்றிக் கொஞ்சம்
உரையுங்கள் ஓர்சிறிது கேட்போம்" என்றாள்!
"இருள்நிலவும் போதினிலே ஒளியைச் சிந்தி
எழில்நிலவச் செய்வதினால் 'நிலவு' என்றார்!
பொருள்நிலவும் பின்அழியும்! எதுவும் மண்ணில்
புரண்டோடும் காலத்தால் வளரும் தேயும்!
பொருள்பொதிந்த இக்கருத்தை நிலவும் வானில்
போய்வளர்ந்தும் பின் தேய்ந்தும் விளக்கிக்காட்டும்!

"நில்லாத நிலையாமை தன்னை; வானில்
நிதம்தேய்ந்து மறைகின்ற நிலவும் நன்குச்
சொல்லாமல் சொல்வதினால் மண்ணில் மக்கள்
சொன்னார்கள் 'நில்லா'வென் றதனை! அந்த
'நில்லா'வென் றபெயர்தான் இடைக்கு றையாய்
'நிலா'வென்றே ஆயிற்று!" என்றேன்! மேலும்
"வெல்லமென இனிப்பவளே! நிலவின் உள்ளே
விளங்குகின்றக் கறையினைப்பார்த் தாயா என்றேன்!

"முயல்போன்றுத் தெரிகிறதே?" என்றாள்! "ஆமாம்
முயலாமல் முன்னேற்றம் ஏது? மண்ணில்
'முயல்!' என்று மனிதருக்கு அறிவு றுத்தும்
முன்னேற்றச் சின்னமடி அஃது! நாளும்
அயல்நாட்டான் அந்நிலவைப் பிடிப்ப தற்கு
அன்றாடம் முயல்கின்றான்! ஆனால் நாமோ
முயல்வந்தக் கதைதன்னைக் கூறிக் கொண்டு
மூடநம்பிக் கைதன்னில் உழலு கின்றோம்!"

சோம்பேறிக் கும்பலடித் தமிழர்! அஃதைத்
துடைத்தென்று எழுவாரோ? நிலவின் மீது
தாம்ஏறி முயற்கறையை மலைதான் என்று
தாமென்று அறிவாரோ? அறியேன்! ஆனால்
நாம்ஏறிப் பார்த்திடலாம் "என்றேன்! "என்ன
நம்மாலே முடிந்திடுமா?" என்றாள்!" "ஓ...ஓ!
நாம்சேர்ந்து வானுலகில் பறக்கும்போது
நடுவழியில் பார்த்திடலாம்" எனஅ ணைத்தேன்!

—இறைவன்

குறையும் - நிறையும்

காஞ்சியில் இந்தப் பகுதி, கிழமை தோறும தொடர்ந்து வெளிவரும். மிகுதிக்கண் இடித்தல் என்றகுறட்பா இயல்புப்படி இவற்றைப் பிரசுரிக்கிறோம். கடிதங்கள், சுருக்கமாக, தெளிவாக, காகிதத்தின் ஒரே பக்கத்தில் முழு முகவரியுடன் எழுதப்பட வேண்டும். கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

"குறையும் நிறையும்" பகுதி
"காஞ்சி"
86, திருக்கச்சிநம்பித் தெரு,
காஞ்சிபுரம்-3.

'காஞ்சி' ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம். நமது கழக அரசு ஆட்சிக்கு வந்த பின்பு எல்லா அரசாங்க அலுவல்களும் படிப்படியாகத்தமிழில்தான்செயல்படவேண்டுமென கருத்தில் கொண்டு, நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் வேண்டிய முயற்சிகளை எடுத்தார்கள். மாண்புமிகு திரு. மதியழகன் அவர்கள் விற்பனைவரி இலாகா அமைச்சராகப் பணியாற்றியபோது, இதற்கான உத்திரவு போடப்பட்டு சிறிது காலம் செயல்பட்டு வந்ததையும் நாம் அறிவோம். ஆனால் தற்சமயம் நமது ஊரில் உள்ள விற்பனைவரி அலுவலர்கள் ஆங்கிலத்தில் நோட்டீசுகளையும் கணக்குத் தணிக்கை செய்த உத்திரவுகளையும் அனுப்பிவிடுகின்றனர் இதனால் ஆங்கிலம் தெரியாத வியாபாரிகள் வேறு நபர்களிடம் தணிக்கை உத்திரவுகளைக்காட்டி, அவர்கள் படித்துச் சொல்லும் அபிப்பிராயப்படி, தங்கள் பதிலையும்எழுதவேண்டியுள்ளது. அதனால் பல தவறுகளும் நிகழ்கின்றன. வியாபாரிகள் தணிக்கை உத்திரவில் உள்ள விபரத்தை சரியாகப் புரிந்துகொள்ள முடியாமலும், தடங்கல் ஏற்படுகிறது. இவற்றை எல்லாம் மனதில் கொண்டு நமது மாண்புமிகு அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் விரைவில் நடவடிக்கை எடுத்து விற்பனைவரி இலாகா பூராவும், அண்ணா ஆசைப்படி தமிழில் செயல்பட ஆவன செய்வார்கள் என நம்புகிறேன்.

ந. க. நமசிவாயம்,
காஞ்சிபுரம்.

'காஞ்சி' ஆசிரியர் அவர்களுக்கு,

இதுவரை அரசு ஊழியர்கள் மட்டுமே கடனாகப் பெற்று வந்த கைத்தறித் துணிச் சலுகையை இவ்வாண்டு முதல் ஆசிரியர்கள் உட்பட ஊராட்சி நகராட்சி அலுவலர்களுக்கும் வழங்க தமிழக அரசு உத்திரவிட்டதை அனைவரும் அறிந்ததே. மேலும் வழக்கப்படி கதர்த் துணியையும் பெற அனுமதிக்கப்பட்டது. இவ்வாண்டில் ஏதேனும் ஒன்றையோ அல்லது இரண்டையுமோ அவரவர் அடிப்படைச் சம்பளத்திற்கு மேற்படாத வகையில் பெற்றுக்கொள்ள அனுமதி தர ஆணையர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தும், காஞ்சி ஊராட்சி ஒன்றியத்தில் கைத்தறித் துணி பெற பல ஆசிரியர்கள் விண்ணப்பித்திருந்தும் அனுமதி தர மறுத்ததுடன், கதரையே ஆசிரியர்கள் அனைவரும் வாங்க வேண்டும் எனக் கூறி கதர் இலாகா அலுவலர் ஒருவருடன் கல்வி விஸ்தரிப்பு அதிகாரியை அனுப்பி மோட்டார் கார் வாகனத்தின் மூலம் கதர்த் துணியைக் கொண்டு வந்து ஒவ்வொரு பள்ளியிலும் நேரிடையாக ஆசிரியர்களிடம் கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டனர். கைத்தறித் துணியை வழங்க மறுத்தது ஏன் என்றும் புரியவில்லை. இத்தகைய புகார்கள் ஏதுமின்றி, பாரபட்சமின்றி கைத்தறித் துணியை வழங்க வேண்டும் என கைத்தறி கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. எஸ். கே. சம்பந்தம் எம். பி. அவர்களால் வேண்டுகோள்விடப்பட்ட பின்பும், ஏன் இந்த நிலை? இதுபற்றி உரிய அதிகாரிகள் கவனிப்பார்களா? வருகின்ற தமிழர் திருநாளுக்குள் கைத்தறித் துணி வழங்க அரசு அதிகாரிகள் ஆவன செய்வார்களா?

பாதிக்கப்பட்ட ஆசிரியர்,
காஞ்சிபுரம்.

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு

காஞ்சியில் குறையும் நிறையும் என்ற பகுதியில், உண்மையிலேயே தங்களுக்கு ஏற்பட்ட அனுபவம் பூர்வமானவற்றை அப்படியே உள்ளக் குமுறலுடன் எழுதியுள்ளனர் என்பதை மறந்துவிடக் கூடாது. இந்த ஆட்சி இன்னும் பல ஆண்டுகள் நிலைத்து நிற்கவேண்டும் என்பதில் ஒருமித்தக் கருத்துக் கொண்டவர்கள் ஏராளம். இந்த இடத்தில் நான் ஒன்றை நினைவுகூற வேண்டியுள்ளது. அதாவது தமிழக அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் நிறைவேற வேண்டியவைகள் ஏராளம், இருப்பினும் முக்கியமான கோரிக்கைகள் சிலவற்றை நிறைவேற்றியிருக்கலாம். அவர்களின் முக்கியக் கோரிக்கைகளில் ஒன்றான "இரகசியக் குறிபேடு" ஒழிப்பு முறையை உடனடியாக அமுலுக்குக் கொண்டு வரவேண்டும். இந்த இரகசியக் குறிப்பேட்டு முறையைக் கையாளுவதால் ஒரு குறிப்பிட்ட இனம் மட்டுந்தான் முன்னேறுகிறது என்பதை இந்த அரசும் உணர்ந்திருக்கும் என்று நினைக்கிறேன். அண்ணா அவர்கள் ஆட்சி பீடம் ஏறியவுடன் முதன் முதலாக அரசு ஊழியர்கள் மத்தியில் பேசினார். அப்பொழுது அரசு ஊழியர்கள் இந்த ஆட்சிக்கு ஆணிவேர் என்றும், முதுகெலும்பு என்றும் கூறினார். அந்த அண்ணனின் பாதையில் வழுவாது அரசோச்சும் "கலைஞரின்" ஆட்சி இந்த இரகசியக் குறிப்பேடு ஒழிக்கும் முறையில் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டுமாய்க்கேட்டுக்கொள்கிறேன்.

ப. வேலுச்சாமி.
கோவை.

அன்புடையீர், வணக்கம்!

குடும்பக் கட்டுபாடு பிரிவைச் சேர்ந்த, அதிகாரிகளும்—டாக்டர்களும் எமது கோத்தகிரி பகுதி கிராமப் புறங்களுக்கு வந்து, குடும்பக் கட்டுப்பாடு செய்வதன் அவசியத்தை பாமர மக்களுக்கு ஒலி பெருக்கி மூலம் விளக்கிப் பேசுவதோடும், நெடுங்காலத்துக்கு முன் தயாரித்த குடும்பக் கட்டுப்பாடு பற்றிய சினிமாப் படங்களைக் காண்பித்துவிட்டும் சென்றுவிடுகிறார்கள். அதற்காக நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் கிராமப்புறங்களுக்கு, குடும்பக் கட்டுப்பாடு அதிகாரிகளுடன் கட்டாயம்ஓர் பெண்டாக்டரும் வருவது நல்லது. குடும்பக் கட்டுப்பாடு பற்றி பெண் டாக்டர் கூறுவதானது கிராம மக்களையும் குறிப்பாக பெண்களையும் கவரக் கூடியதாக அமையும். பெண்களுக்கு மனதில் சந்தேகமும் — பயமும் நீங்கி

(12-ம் பக்கம் பார்க்க)

பிறக்கப்போவது ஆணா? பெண்ணா?

பையனா...? பெண்ணா...? ஒவ்வொரு பிரசவத்தின் பின்னும் கேட்கப்படும் கேள்வி மட்டுமல்ல அது. மணமான ஒவ்வொரு தம்பதியினரையும் மகப்பேற்றின் முன்னர் வாட்டும் கேள்வியும் அது. சிலர் யூகித்துரைப்பது சில சமயங்களில் சரியாக இருக்கிறது; சில வேளைகளில் தவருகிவிடுகிறது.

கணிதவியல் நிபுணர்களோ ஆண் அல்லது பெண் குழந்தைக்கான வாய்ப்பு 50–50 சதம் என்ப. ஆனல் உண்மையில் பார்க்கப் போனல் ஒவ்வொரு 106 பையன்களுக்கும் 100 பெண்கள் பிறக்கின்றனர்.

எனினும் இந்தவிகிதமும்நிலையானதென்று கூற முடியாது. சமாதான காலத்தைக்காட்டிலும், யுத்தகாலத்தில் பிறந்த குழந்தைகளில் ஆண் குழந்தைகளின் எண்ணிக்கையே மிகுந்திருந்தது. யுத்தத்தின் விளைவாக ஏற்பட்ட ஆள் சேதத்தை ஈடு கட்டுவதற்கு இயற்கை அன்னை மேற்கொண்ட வழியோ இது என்று கருதத்தோன்றுகிறது.

பிறக்கும் குழந்தை ஆணா பெண்ணா என்பது எதைச் சார்ந்துள்ளது? பல குடும்பங்களிலும் பிறக்கும் முதற் குழந்தைகள் ஆண் குழந்தைகளாகவே உள்ளன. தவிர பெற்ருேரின் வாழ்க்கை அவர்களது வேலை ஆகியவற்றைப் பொருத்தும் இது அமைகிறது.

1943ல் அமெரிக்க டாக்டரான மார்யானு பெர்ன்ஸ்டீன் அமெரிக்காவிலும் ஜெர்மனியிலும் உள்ள வசதியுள்ள குடும்பங்களில் ஒவ்வொரு 100 பெண் குழந்தைகளுக்கும் 120–125 ஆண் குழந்தைகள் உள்ளன என்றும், நீக்ரோ குடும்பங்களின் பெண்கள் அதிகம் பிறக்கின்றன என்றும் தனது ஆராய்ச்சி முடிவை அறிவித்தார்.

இந்தியாவில் பிறக்கும் குழந்தைகளில் ஒவ்வொரு 1000 பெண்ணுக்கும் 987 ஆண் குழந்தைகள் தோன்றுகின்றன. பாரம்பரிய இயல் நிபுணர்களின் கருத்துப்படி மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் கொண்டே ஒரு சமூகத்தின் பாலின விகிதத்தைக் கொள்ளமுடியும்.

வயது குறைந்த இளைஞர்கள், வயது முதிர்ந்த முதியோர்கள் ஆகியோருக்கு அநேகமாக ஆண் குழந்தைகள் பிறக்கின்றன. அதே போல தாய்மார்களிலும் 18 வயதிற்கும் 22 வயதிற்கும் இடையிலுள்ளோர் 109 பெண் குழந்தைகளுக்கு 120 பையன்கள் வீதமும் 38–42 வயதுடைய தாய்மார்கள் 100 பெண் குழந்தைகளுக்கு 90 பையன்கள் வீதமும் பெறுகின்றனர்.

வருங்கால சந்ததி பிறக்கும் முன்னே அது ஆணா அல்லது பெண்ணா என்பதை முன்கூட்டி அறிவது சாத்தியமாகலாம்? அது சாத்தியமாகிவிட்டால் அதன் பின்னர் பிறவிலேயே குழந்தைகளின் பாலினத்தைக் கட்டுப்படுத்துவதும் சாத்தியமாகக் கூடும்.

உயிர்ப்பிராணிகளின் பாலினத்தைக் கட்டுப்படுத்துவது பொருளாதாரத்திற்கும் இன்றியமையாதது. உதாரணமாக ஒரு பால் பண்ணையில் நிறைய பசுக்கள் இருப்பதுதானே லாபகரமானது. கம்பளிரோமப் பண்ணையில் ஆண் ஆடுகள் அதிகம் இருப்பதே லாபகரமானது.

குறிப்பிட்ட மந்தைக்குநல்லசெழிப்பான ஆகாரம் கிடைத்துக் கொண்டிருந்தால். பெண் 'வாரிசுகளே நிறையப் பிறக்கின்றன என்றும் பற்ருக்குறை தீனியிருந்தால் ஆண் பிராணிகள் அதிகமாகப் பிறக்கின்றன என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

கோழிகளுக்கு அளிக்கப்படும் உணவில் உடல்மாறுதல் நிகழ்ச்சிகளை மேம்படுத்தும் சில பொருள்களைச் சேர்த்தால், அப்பொழுது பெண்ணினமே பெரிதும் தோன்றுவதைக் கண்டார்கள்.

எனினும் பிராணிகளின் பாலினத்தை மாற்றுவது என்பது அவ்வளவு எளிதானதல்ல. ஏதேனும் ஒரு அம்சத்தை மட்டுமே மனிதன் காண்கிருன். அதனை அவன் மாற்ற முற்படும் பொழுது பல எதிர்பாரா அம்சங்கள் அவனை எதிர்நோக்குகின்றன.

உயிர்ப் பிராணிகளினது சந்ததிகளின் பால் இன்னவென்பதை நிர்ணயிக்கும் உயிரியல் கிரியைகளை ஆராய்ந்து அவற்றின் மீது மனிதன் ஆதிக்கம் செலுத்த முடியுமாவென்பதை சோவியத் நிபுணர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்யும் போது பிறக்கவிருக்கும் பிராணிகளின் பாலினத்தை நாம் கட்டுப்படுத்திவிடுதல் சாத்யமாகும். ஏனெனில் ஆணினத்தையோ பெண்ணினத்தையோ தோற்றுவிக்கும் உயிரணுக்களை செயற்கை முறையில் பிரித்தெடுத்து தேவையானதை செயற்கை முறையில் கருப்பைக்குள் செலுத்தி கருத்தரிக்கச்செய்யலாம்.

ஆனல் விந்துவிலுள்ள உயிரணுக்களைப் பிரிப்பது எப்படி? ரஷ்ய பெண் ஆராய்ச்சியாளரான வி. ஷ்ரெதர், விந்துக்களிலுள்ள ஆணின் குரோம் சோமகள், மின் வெளியில் எதிர் துருவத்தை நோக்கியும் செல்கின்றன என்று கண்டு பிடித்துள்ளார். இம்முறையில் முயல்கள், ஆடு, காட்டுப்பன்றி இவற்றைக்கொண்டு நடத்திய பரிசோதனைகளில் 75 சதவிகிதம் வெற்றி கிடைத்துள்ளது.

எனவே, வருங்காலம் நம்பிக்கைக்குரியதுதானே!

★

11-ம் பக்கத் தொடர்ச்சி

நல்லெண்ணம் ஏற்பட வழி வகுக்கும். மற்றும் கூடி இருக்கின்ற மக்களை ஏதாவது சந்தேகங்கள் இருப்பின் கேட்க சொல்லி, தகுந்த பதிலும் தந்தால் சிறப்புடையதாக இருக்கும். பொதுவாக கேள்விகள் கேட்க கிராம மக்கள் வெட்கப்படுவது இயற்கைஅதனுல் குடும்பக் கட்டுப்பாடு பிரிவைச்சார்ந்த குழுவினரோ, ஏதோ தமக்குத்தெரியாத சில சந்தேகங்களைக் கேட்பதுபோல டாக்டரை கேட்பதும், அவர்களின் சந்தேகங்களைப் போக்கும் வகையில் டாக்டர் பதில் தருவதுமாக சிறிது நேரத்தினை ஒதுக்கினுல் நல்லது. மணிக்கணக்காக பிரசங்கம் செய்வதைவிட—கேள்வி—பதில் முறை சில நிமிடங்களே இருப்பினும் பாமர மக்களுக்கு உபயோகமாக இருக்கும் குடும்பக் கட்டுப்பாடு பிரிவு இதனை கவனிக்குமா? குறை தீருமா?

அன்பன்,
இநன்சன் பி.ஏ.
கோத்தகிரி.

எம். கே. முகைதீன் பிச்சை, திருவாரூர்

கம்யூனிசமென்றால், சோஷலிசக் குறிக்கோள் கொண்ட சித்தாந்தம்தானே! சோஷலிசக் கொள்கைகளைக் கொண்டிருக்கும் சில கட்சிகள், கம்யூனிஸ்டுகள் என்றால் ஏன் கதறுகின்றன?

இக் கேள்வியை கம்யூனிஸ்டுக் கட்சி அலுவலகத்திற்கு அனுப்பி இருக்கவேண்டும்! என்றாலும் பரவாயில்லை, சோவியத் ரஷ்யாவில்கூட இன்னமும் கம்யூனிசம் முழுமையாக நுழைக்கப்படவில்லை. ஒரு அரசாங்கம், தானாகவே எந்த அழிவுச்சக்தியின் தூண்டுதலுமின்றியே வாடி உதிர்ந்துவிடும் நிலைமையை எய்தும்போது. ஒருநாடு முழுமையான கம்யூனிசத்தில் திளைக்கும் என்கிறார் லெனின். அரசாங்கம் என்பதிலே கம்யூனிஸ்டுகளுக்கு முழு நம்பிக்கை இல்லை, ஒடுக்கப்பட்டவர்கள், ஒடுக்குபவர்களை ஒடுக்கும் ஒரு அமைப்பாக இருக்கவேண்டுவதே ஒரு அரசாங்கத்தின் நோக்கமாயிருக்க வேண்டும் என்பது கம்யூனிசச் சித்தாந்தம். ஒடுக்குபவர்கள் முழுமையாக ஒழிக்கப்பட வேண்டும் என்கிறது மார்க்சிசம். பாட்டாளி மக்களது வாழ்க்கை உயர்வுக்குஏழை எளியவர்களை வதைக்கின்ற எவரையும் எதைச் செய்தேனும் ஒழிக்க வேண்டும் என்பதுப் கம்யூனிசக் கொள்கைதான்! சோஷலிசச் சித்தாந்தம் ஒவ்வொரு துறையிலும், ஒவ்வொரு படியாகத்தான் செயல்பட முடியும் என்பதை லெனின் கூட ஒப்புக் கொண்டிருக்கிறார். வாழ்க்கை வாழ்வதற்குரிய அனைத்துத் துறையும் சோசலிசக் கொள்கையைக் கொண்டுவிட்டால் —அதாவது உழைக்கும் வர்க்கம், அனைத்து அதிகாரங்களையும் மேற்கொண்டு செயல்படும் நிலைமை தோன்றிவிட்டால், ஒடுக்கி அடக்கும் ஒரு நிலை தோன்றாது என்பது கம்யூனிசவாதம், அப்போது வாழ்க்கை மேம்பாட்டில் மக்கள் இருக்கமுடியும் என்பது அவர் தம் நம்பிக்கை. மனித குலம் இரண்டே இரண்டு கூறாகத்தான் இருக்கமுடியும் என்றும், ஒன்று பாட்டாளி வர்க்கம் என்றும் மற்றது முதலாளி வர்க்கம் அல்லது சுரண்டும் வர்க்கம் என்றும் அது கருதுகிறது, பாட்டாளி வர்க்கம், அதிகாரத்துக்கு வரும்போது சுரண்டும் வர்க்கம் இருக்க முடியாது; எனவே உலக முழுதும் பாட்டாளி வர்க்கமாகவே சோஷலிசச் சித்தாந்தம் செயல்படும் தன்மையில், கம்யூனிசம் பரவிக் கொண்டிருக்கும் ஒரு நிலையிருக்கும் என்பது கம்யூனிஸ்டுகளது நம்பிக்கை. சோஷலிசக் கொள்கை பற்றியும், பாட்டாளி வர்க்கத்தின் முன்னேற்றம் பற்றியும் அது கூறுகிற வரையில் இனிப்பாகத்தான் இருக்கின்றது. ஆனால் அவற்றை அடையும் முறைக்குக் காட்டப்பட்டுள்ள வழிவகைகளைக் காணும் போதுதான், சோஷலிசக் கட்சிகளில் கூட, ஐயோ! கம்யூனிஸ்டா? என்று வாய்விட்டு அலறவேண்டியிருக்கிறது! அதனாலே கம்யூனிஸ்டுகள் பயங்கரவாதிகளாகிவிடுகிறார்கள்! பயந்து கூப்பாடுபோடவேண்டியிருக்கிறது. கம்யூனிசத்தைப் பரப்பும் பணி, அதாவது சோஷலிசத்தை அடையும் திட்டம் மேற்கு வங்காளத்தில் என்ன பாடுபடுகிறது என்பதைக் கண்டீர்கள் இல்லையா? கேரளத்தையும் கவனியுங்கள்! கூப்பாட்டின் பொருள் புரியும். இந்தியத் துணைக்கண்டத்தின் இயற்கை அமைப்புக்கும், சமுதாய அமைப்பு முறைக்கும் உகந்ததா அச் சித்தாந்தம் மறுபரிசீலனை செய்யப்பட்டால் தான் எதிர்காலமிருக்க முடியும் என்பது மட்டுமல்ல நம் போன்ற முற்போக்குக் கட்சிகள்கூட அதைப் பாராட்ட முடியும்!

எம். சி. ரெத்தினம், மாச்சம்பள்ளி.

'அம்மா என்று தூரத்து உறவில் ஒருவருக்குப் பதில் தரும் முறை விரும்பத்தக்கதல்ல அல்லவா?

அம்மா என்பது தூரத்து உறவா? உதிரத்துடன் கலந்த உறவு ஐயா அது 'அம்மா' என்பதில் வயதைக் கூட்டிச் சொல்லும் நிலைமையேற்படுகிறது என்பதால் நீங்கள் விரும்பவில்லையா! 'அம்மா' என்னும் உதிரத்து உறவோடு அழைப்பதில் பெருமை தவிர சிறுமையேதுமில்லையே!

உரைகல்:

முக்கனி

மாணவர் திங்கள் வெளியீடு

அண்ணாமலை நகர்-சிதம்பரம்

ஆசிரியர்கள்:

ஜே. வி. நாதன்—இரத்தினகணேசன்

விலை இருபது காசுகள்.

இதழின் ஆசிரியர்களாகவிருக்கும் கல்லூரி மாணவர்கள், இதழின் நிருவாகத்திற்கென்று இன்னும் மூன்று மாணவர்களின் துணையுடன் தரமான ஒரு வெளியீட்டைக் கொண்டு வந்திருப்பது பாராட்டுக்குரியதாகும். இதழின் பாராட்டத்தக்க அம்சமாக இலக்கிய அறிஞர்களின் சந்திப்பு என்ற வகையில் தமிழுக்குச் சேவை செய்து சிறப்புற்றவர்களின் பேட்டியை வெளியிட்டு, அந்த அறிஞர்கள் நாட்டுக்காற்றிய நல்ல தொண்டுகளை அறிமுகப்படுத்தி இருக்கிறது. இதழின் வேறு சுவையான அம்சங்களாக கவிதை, கதை, துணுக்குகளும் நிரம்ப இடம்பெற்றுள்ளன ஒரு கலைக்களஞ்சியம்போல, பல்வேறு இதழ்களின்—ஏடுகளின்-நூல்களின் 'இதயங்களை'த் திரட்டி, ஆங்காங்கே சுவைபடச் சேர்த்திருக்கிறார்கள் இளைஞர்கள். "மாணவர் பிரச்னை" என்ற ஒன்றுக்கு உயிரூட்டம் கொடுத்துக்கொண்டு வரப்படுகின்ற இந்த நாளில், மாணவர்களால் நடத்தப்படும் இந்த இதழ், அந்தப் பிரச்னைகளின் உண்மை வடிவத்தைத் திரட்டி, அரசுக்குக் காட்டமுயல்வது பெரும்பயன் தரத்தக்கதாக இருக்கும், மாணவர்களுக்கும் அது பயன் தரும் இதழின் மூலம், மாநிலம் முழுதுமுள்ள மாணவர்களோடு தொடர்புகொள்ள நல்வாய்ப்புண்டு. அந்த வாய்ப்பு. பிரச்னைகளைத் தீர்க்க, தெளிவுபடுத்த. தீர்த்துக்கொள்ள வழியுண்டாக்கும். அதற்கு 'முக்கனி' முயன்றால் நல்லது. முயலவேண்டும்.

—சீயேயெம்

கருணைக் கடவுளின் கருணை மனம்!

அறிவுலகமன்னன், தென்னாட்டுக் காந்தி காலத்தின் கருணை வடிவம் அண்ணா அவர்கள் தமது கடைசி காலத்திலும்கூட படுத்த படுக்கையாக உடல் குன்றியிருந்த போதும்கூட ஒரு ஏழை மனிதனுடைய உயிர் எவ்வளவு விலைமதிக்க முடியாதது என்பதைத் தனது அன்பு உள்ளத்தால் அவரது பண்பை உலகுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார் தூக்கில் ஊசலாடிக் கொண்டிருந்த ஓர் உயிரைத் தடுத்து நிறுத்தி ஒரு அபலைப் பெண்ணின் தாலிக்கு மறு வாழ்வு கொடுத்ததைக் கேள்விப் படுகின்ற மானிடம் அதாவது மனிதத் தன்மை மெய் சிலிர்க்கிறது; கண்ணீரைப் பொழிகிறது! அப்புக்குட்டன் ஒரு வெற்றிலைப் பாக்குக் கடை வியாபாரி. அவர் தூக்கு தண்டனைபெற்றார். இதைக் கண்ட அவரது மனைவி அழுது துடித்து புழுபோல் புரண்டு நெளிந்து, கண்ணீரும் கம்பலையுமாய் தனது மகனுடன் அனாதையாக அலையும் அந்தப் பெண்ணின் சோக நிலையை, அன்பின் திருவுருவான அண்ணா அவர்கள் கண்டு அப்புக்குட்டியினுடைய தூக்குத் தண்டனையைத் தடுத்து நிறுத்தினார். அந்த சோகக் கதையின் விவரம் இதோ.

சென்ற ஆண்டு நவம்பர் மாதம் பதிமூன்றாம் தேதி என் வீட்டு வாசலில் வேகமாக ஒரு கார் வந்து நின்றது. எட்டிப் பார்த்தேன்.

ஓர் இளம் பெண். கையில் இரண்டு வயது மதிக்கத்தக்க ஒரு குழந்தை. இரண்டு மூன்று பெரியவர்கள் ஆக மொத்தம் ஐந்து பேர்கள் மாடிப் படியில் தட தட வென்று ஏறி வந்தவாறே "வக்கீலம்மா வீடு இதுதானே?" என்று மேல் மூச்சு வாங்க கேட்டார்கள்.

பாதி டிபனைத் தட்டில் அப்படியே வைத்து விட்டு என்ன விசேஷம்? யார் நீங்கள்?" என்றேன் ஒன்றும் புரியாமல்.

பதில்: அனைவரும் ஒப்பாரி வைத்தனர். திடுக்கிட்டுப் போனேன் நான்.

சிறிது நேரம் அது ஓய்ந்த பிறகு ஒரு மாதிரியாக விஷயத்தைச் சொன்னார் அந்தப் பெண்ணின் தந்தை.

"இது என் பொண்ணுங்க. பேர் ருக்மணி. பதினெட்டு வயது கூட ஆகவில்லை. நாளைக்கு இவள் புருசனை அதாவது மாப்பிள்ளையை மதுரையில் தூக்குப் போடப்போறாங்க. ஜெயில்லேயிருந்து இதுபற்றித் தந்திவந்தது. நேற்று சாய்ந்திரம் அங்கே போய் அவரைக் கடைசியாப் பார்த்துவிட்டு இங்கே ஓடிவருகிறோம் எப்படியாவது தண்டனையை நிறுத்த ஏற்பாடு செய்யுங்கம்மா!"

வந்திருந்த எல்லோரையும் விட, பாவம் அந்தப் பெண்ணின் கோலத்தைப் பார்க்கத்தான் எனக்குக் கண்ராவியாக இருந்தது. நானும் பெண்ணானதாலோ என்னவோ, அந்த ஒரு நிமிடத்தில் உணர்ச்சி வசப்பட்டு விட்டேன். ருக்மணியின் கதை இதுதான் மணவாளக் குறிச்சியில் அப்புக்குட்டன் (ருக்மணியின் கணவன்) ஒரு வெற்றிலைப் பாக்குக் கடை வைத்திருந்தான். இரண்டாண்டுகளுக்கு முன்னால் அவனுக்கும் ரகுவீரன் என்பவனுக்கும் நடந்த ஒரு தகராறில் கைகலப்பு முற்றிப்போயிற்று. விளைவு ரகுவீரன் இறந்துவிட்டான். மதுரையில் விசாரிக்கப்பட்ட இந்த வழக்கில் அப்புக்குட்டனுக்கும் அவனது சகோதரனுக்கும் தூக்கும், மற்றொருவனுக்கு ஏழாண்டுகள் தண்டனையும் கிடைத்தது.

அப்பீல், சென்னை உயர்நீதி மன்றம் அப்புக்குட்டனுடைய தண்டனையை உறுதி செய்தது. ஏழாண்டு சிறைத் தண்டனை பெற்றவன் மட்டும் விடுதலையாகி விட்டான்.

தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றும்படி ஜனாதிபதிக்குக் கருணை மனு அனுப்பினாள் ருக்மணி. விளைவு: அப்புக்குட்டனின் சகோதரனுக்கு மட்டும் கருணை காட்டப்பட்டது. அப்புக்குட்டனுக்குக் கிடைக்கவில்லை.

பின்னர் ஒருமுறை தமிழக கவர்னர் கன்னியாகுமரிக்கு விஜயம் செய்தபோது அவரிடம் ஒரு கருணை மனு கொடுத்தாள் ருக்மணி. அதற்கும் எந்தவிதமான பலனும் கிடைக்கவில்லையாம்.

கடைசியில் என்னிடம் வந்திருக்கிறார்கள்.

"நாளைக்காலை தூக்கு மரத்திலேறவிருக்கும் என் கணவனைக் காப்பாற்ற வேண்டும்' என்று கெஞ்சும் அந்தப் பெண்ணுக்காக நான் என்ன செய்ய முடியும்? யோசனை செய்தேன்.

தூக்கு தண்டனை நிறைவேற்றப்படுவதைத் தற்காலிமாக நிறுத்தி வைக்க முதலமைச்சருக்குத் தான் அதிகாரம் உண்டு. ருக்மணிக்காக அவசரமாக ஒரு மனுவைத் தயார் செய்தேன். வழக்கின் விவரங்களைக் குறிப்பிட்டுவிட்டு, கடைசியில்-

தங்களை இந்த மேற்பதவிக்கு உயர்த்தியிருப்பது தங்களது மனிதாபிமானமும் அனைவரிடமும் தாங்கள் கொண்டுள்ள நல்ல எண்ணமும்தான்.

நாளைக்குத் தூக்கிலிடுவது என முடிவு செய்யப்பட்டிருக்கிறது. தாங்கள் மிகவும் கருணை காட்டி மதுரை சென்ட்ரல் ஜெயில் அதிகாரிகளுக்குத் தந்திமூலம் அதை நிறுத்திவைக்க இ. பி. கோ 54ன் படிஉத்தரவிடுமாறு பணிவுடன் கோருகிறேன்"

என்று எழுதி முடித்தேன். முதலமைச்சராக

இருந்த அண்ணா, அமெரிக்காவில் சிகிச்சை பெற்று அப்போது தான் சென்னைக்குத் திரும்பியிருந்தார். இன்னும் முழு அளவில் அவர் பொதுக் காரியங்களில் ஈடுபடவில்லை.

வீட்டு வாசலில் 'நீங்கள் யார்? என்று விசாரித்தார் ஓர் அதிகாரி.

"நான் ஒரு வக்கீல்; இவர்கள் என்னோடு வந்தவர்கள். ஒரு வழக்கு சம்பந்தமாக முதலமைச்சரை அவசரமாகப் பார்க்க வேண்டும்" என்றேன்.

நாங்கள் வைத்திருந்த மனுவை மேலெழுந்தவாரியாகப் படித்தார் அந்த அதிகாரி.

பிறகு இப்போது சி. எம். வீட்டிலில்லை; ஹோம் செக்ரட்ரியை வேண்டுமானால் போய்ப்பாருங்கள் என்றார் அவர்.

ஹோம் செக்ரடரியைப் பார்ப்பதில் எந்தப் பலனுமில்லை என்று எனக்குத் தெரியும். இருப்பினும் என்ன செய்வது? வந்திருப்பவர்களைத் திருப்திப்படுத்துவதற்காகவாவது போகலாம் என்று தலைமைச் செயலகத்திற்கு விரைந்தேன்.

நான் எண்ணியபடியே ஹோம் செக்ரடரி "இவ்விஷயத்தில் நான் எதுவும் செய்வதற்கில்லையே" என்றார்.

வந்த வழியே திரும்பினோம் மீண்டும் முதல்வரைப் பார்ப்பதற்காக. அப்போது நேரம் பகல் ஒரு மணி.

நல்லவேளை. முதலமைச்சர் வீட்டுவாசலில் அப்போது எந்த அதிகாரியும் தென்படவில்லை.

தற்செயலாக வாசல் பக்கம் வந்தார் திருமதி ராணியம்மாள்.

அவர்கள் என்னைக்கண்டதும் "யாரம்மா நீ"? என்று கனிவுடன் கேட்டார்.

நான் அவசரமாக என்னை அறிமுகப்படுத்திக் கொண்டு விஷயத்தைச் சுருக்கமாகச் சொன்னேன்.

ருக்மணியையும்அவள்குழந்தையையும் வீட்டினுள்ளே அழைத்துச்சென்று பாலும்பழமும் கொடுத்தார்ராணியம்மாள். கூடவந்த மற்றவர்கள் பிரமை பிடித்தது போல் நின்று கொண்டிருந்தனர்.

எனக்கு மட்டும் முதலமைச்சரைப் பார்க்க அனுமதி கிடைத்தது.

திருமதி ராணியம்மாள் என்னை அண்ணாவிடம் அறிமுகப்படுத்தினார். கட்டிலில் படுத்திருந்த அண்ணா கைகூப்பியபடி.

'வாட் கேன் ஐ டு பார் யூ மேடம்?' என்றார். களைப்பான ஆனால் கனிவான குரல் அது.

வழக்கை விரிவாகவும் வந்த நோக்கத்தை சுருக்கியும் சொல்லிவிட்டு அந்தப் பெண்ணைக் கண்டால் மிகவும் பரிதாபமாக இருக்கிறது என்றேன் முடிவில்.

நீங்கள் எவ்வளவு நாட்களாக பிராக்டிஸ் செய்கிறீர்கள்? என்று என்னைக் கேட்டார் அண்ணா.

'மூன்றாண்டுகளாக' என்று பதில் சொன்னேன் நான்.

சரிதான்; ஆவன செய்கிறேன் என்று உறுதியளித்து விட்டுத் தனது அந்தரங்கச் செயலாளரைக் கூப்பிட்டனுப்பினார்.

இந்த மனு ஒரு அவசரமான விஷயம்; உடனே மதுரை ஜெயில் அதிகாரிகளுக்குத் தண்டனையை நிறுத்தி வைக்கத் தந்தியடியுங்கள் என்றார்.

நான் முதலமைச்சரைச் சந்தித்துவிட்டு வெளியே வந்தபோது தனது தாலியை இறுகப் பிடித்துக்கொண்டு கண்ணீரும் கம்பலையுமாக அழுது கொண்டிருந்தாள் ருக்மணி.

"பயப்படாதே நல்ல முடிவு" என்றேன் நான் அவளிடம்.

அவ்வளவுதான்!

தனது குழந்தையைத் திருமதி ராணியம்மாளின் காலடியில் கிடத்திவிட்டு சாஷ்டாங்கமாக அவரை நமஸ்கரித்தாள் ருக்மணி.

முதலமைச்சரின் தந்தி மதுரைஜெயில் அதிகாரிகளுக்குப் போய்ச் சேர்ந்ததாகப் பதில் தந்தி வர வேண்டும்; அப்போதுதான் எங்களுக்கு உயிர்வரும் என்றார் ருக்மணியின் தந்தை.

ஒரு மாதிரியாக மாலை ஆறு மணியளவில் மதுரையிலிருந்து பதில் தந்தி வந்தது.

அப்புக்குட்டனின் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. காந்திஜி நூற்றாண்டு விழாவையொட்டி அண்மையில் மேலும் அது குறைக்கப்பட்டு விட்டதாகத் தெரிந்தபோது எனது மகிழ்ச்சி இரட்டிப்பாயிற்று.

ஆனால், ஆனால்......

அந்த ஏழைக்கு உயிர் தந்த அந்த ஏந்தலின் உயிர்......!

★

வருந்துகிறோம்

தமிழ்நாடு சட்டமன்ற காங்கிரஸ் உறுப்பினர் திரு. சிதம்பர நாடார் அவர்கள் இந்தக் கிழமை 17-12-69ம் நாளன்று மரணமடைந்த செய்தியறிந்து வருந்துகிறோம். 56 வயதுடைய இவர், காங்கிரசுக் கட்சியின் பல போராட்டங்களிலும் பங்குபற்றியவர் ஆவார். பி.ஏ.பி.எல். படித்துவிட்டு வக்கில் தொழில் புரிந்தாலும்கூட, குமரிமாவட்டம் கேரளாவோடு இணைந்திருந்த காலத்தில், இந்த மாவட்டத்தின் சார்பில் திருவாங்கூர்-கொச்சி அரசில் அமைச்சர் பதவி வகித்தவர். இவரது பிரிவால் வாடும், அவரது குடும்பத்தாருக்கு நம் இதயார்த்தமான இரங்கலைப் படைத்துக்கொள்கிறோம்-

—ஆசிரியர்

காஞ்சி பொங்கல் மலர்

கருத்துக்கு நல்விருந்து

நெஞ்சை அள்ளும்
சிறுகதைகள்
தெளிவளிக்கும்
கட்டுரைகள்
இன்சுவை மிகு
கவிதைகள்

பொங்கல் மலர்

முல்லை மணம்
முக்கனிச் சாறு
முத்துப்பேழை

கருத்துச் சோலையில் உலவிட!
முத்தமிழ்ச் சுவை பருகிட!

அறிஞர் அண்ணாவின் புதிய சில
படைப்புகள்
நிறைந்த
அறிவுப் பெட்டகம்

காஞ்சி
பொங்கல் மலர்
தேவை குறித்து இன்றே தெரிவித்திட வேண்டுகிறோம்

விலை 1-50

ஆசிரியர், வெளியிடுபவர், சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-2
86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.